**மனன வசனம்**

காற்று
பலமாயிருக்கிறதைக்
கண்டு, பயந்து,
அமிழ்ந்துபோகையில்:
ஆண்டவரே,
என்னை ரட்சியும்
என்று கூப்பிட்டான்.
உடனே இயேசு
கையை நீட்டி
அவனைப் பிடித்து:
அற்பவிசுவாசியே,
ஏன் சந்தேகப்பட்டாய்
என்றார்.
மத்தேயு 14:30,31.

**ஆராய்ச்சிக்கு**

லூக்கா 5:1-11;

மத்தேயு 16:13-17;

மத்தேயு 14:22-33;

லூக்கா 22:31-34;

லூக்கா 22:54-62;

கலா 2:9, 11-14.

மார்ச் 25 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

# பேதுரு என்ற மனிதன்

1பேதுரு, 2பேதுரு என்று தன்னுடைய பெயரில் அழைக்கப்படும் இரண்டு புத்தகங்களை பேதுரு எழுதியிருக்கிறார். இயேசுவின் முதல் சீடர்களில் பேதுருவும் ஒருவர். இயேசு இப்பூமியில் ஊழியம்செய்தபோது, அவரோடுதங்கியிருந்தவர். இயேசுஉயிர்த்தெழுந்ததால் காலியாயிருந்த கல்லறையை முதலாவது பார்த்த சீடர்களில் அவரும் ஒருவர். எனவே, தான் பெற்ற வளமான இந்த அனுபவங்களைவைத்து, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் வல்லமையான இந்த இரு நிருபங்களையும் அவர் எழுதமுடிந்தது. ‘நாங்கள் தந்திரமான கட்டுக் கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்’ என்கிறார் பேதுரு. 2பேதுரு 1:16.

சுவிசேஷப் புத்தகங்களில் பெரும்பாலும் பேதுருவின் வெற்றிகளும் தோல்விகளும் காட்டப்படுகின்றன. இயேசுவோடு சீடர்கள் ஏதாவது பேசவேண்டுமானால் பொதுவாக பேதுருதான் அவர்களுக்கு செய்தித் தொடர்பாளராக இருந்தார். இயேசு உயிர்த்தெழுந்து, பரமேறிச் சென்றபிறகு, பேதுரு ஆதிச்சபையின் ஒரு முக்கியத் தலைவரானார். அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திலும் கலாத்தியரிலும் அவரைப்பற்றி வாசிக்கலாம்.

முக்கியமாக, தவறுசெய்தல், மன்னிப்புபெறுதல், விசுவாசத்தோடும் தாழ்மையோடும் முன்னேறிச் செல்லுதல் போன்றவற்றைத் தமது சொந்த அனுபவத்தின் மூலம் பேதுரு நன்றாகவே அறிந்திருந்தார். தேவ கிருபையை தாமே அனுபவித்திருந்ததால், அதே கிருபை தேவைப்படுகிற நம் ஒவ்வொருவருக்கும் வல்லமையான ஒரு சாட்சியாகத் திகழ்கிறார்.

2017, ஏப்ரல் 1 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## ‘என்னைவிட்டுப் போகவேண்டும்’

பேதுரு ஒருமுறை கலிலேயாக் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது, இயேசு அவரைச் சந்தித்தார். மத் 4:18; மாற்கு 1:16; லூக் 5:1-11. இராமுழுவதும் பேதுரு பிரயாசப்பட்டும் ஒரு மீன்கூட அகப்படவில்லை. ஆழத்திலே தள்ளி, வலையைப் போடுமாறு இயேசு சொன்னதும், அவரும் அவரோடு இருந்தவர்களும் அதற்குக்கீழ்ப்படிந்தார்கள். அவர்களுடைய படவுகள் அமிழத்தக்கதாக அவர்கள் மீன்களைப் பிடித்தார்கள்; பேதுருவும் அவரோடு இருந்தவர்களும் அதனால் நிச்சயம் பிரமிப்படைந்திருப்பார்கள். அந்த அற்புதத்திற்குப்பிறகு, அவர்கள் மனதில் எப்படிப்பட்ட சிந்தனை ஓடியிருக்கும்?

***லூக்கா 5:1-9ஐ வாசியுங்கள். லூக்கா 5:8ல், பேதுரு சொல்வதிலிருந்து அவரைப்பற்றி என்ன தெரிகிறது? அப்போதைய அவருடைய ஆவிக்குரிய நிலைபற்றி அதிலிருந்து என்ன புரிகிறது?***

இயேசுவைப்பற்றி பேதுரு ஏற்கனவே அறிந்திருந்த விஷயங்கள் அவருக்கு ஊக்கம் அளித்திருக்கவேண்டும். வலையை ஆழத்தில் போடும்படி அவர்களிடம் இயேசு சொல்கிறார். இதுவரையிலும் ஒருமீன்கூட அகப்படாததால் பேதுருவுக்கு நம்பிக்கையில்லை; ஆனாலும், ‘‘உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன்’’ என்று சொல்கிறார். வச 5. எனவே, இயேசுவைப்பற்றி ஏற்கனவே பேதுருவுக்கு ஏதாவது தெரிந்திருக்கவேண்டும். அதுதான் அவரைக் கீழ்ப்படிய வைத்தது. இந்தச் சம்பவத்திற்கு முன்னரே, இயேசுவோடு சிலகாலம் பேதுரு இருந்திருக்கிறார் என்பதற்கும் ஆதாரம் உள்ளது.

அதற்கு ஒரு முக்கிய ஆதாரம் லூக்கா 5:3. இந்த அற்புதத்திற்குமுன் நிகழ்ந்த அங்குச் சொல்லப்படுகிறது. ‘அப்பொழுது அந்தப் படவுகளில் ஒன்றில் ஏறினார், அது சீமோனுடையதாயிருந்தது; அதைக் கரையிலிருந்து சற்றே தள்ளும்படி அவனைக் கேட்டுக்கொண்டு, அந்தப் படவில் உட்கார்ந்து, ஜனங்களுக்குப் போதகம்பண்ணினார்.’ அங்கு இயேசு பேசின வார்த்தைகளும் பேதுருவில் ஓர் ஆழமான தாக்கத்தை உண்டாக்கியிருக்கவேண்டும்.

ஆனாலும், ஏதோ ஒன்று இயேசுவிடம் அதிகம் காணப்பட்டதை, அதாவது, தன் பாவ நிலையைக் காட்டிலும் பரிசுத்தமான ஒரு நிலை அவரிடம் காணப்பட்டதை அந்த அற்புதத்திற்குப் பிறகு பேதுரு உணர்ந்தார். ஆண்டவரிடம் அவர் எதையும் மறைக்க நினைக்கவில்லை. பேதுரு தன் பாவ நிலையை உணர்ந்ததும், அதை வெளிப்படையாக ஒத்துக்கொள்ளத் தயங்காததும் இதைத் தெளிவாக்குகிறது. அதனால்தான் அத்தகைய ஓர் அழைப்பை பேதுரு பெற்றதில் ஆச்சரியம் எதுவுமில்லை! பேதுருவிடம் பல தவறுகள் இருந்தன; அவை என்னவாக இருந்தாலும், விளைவை எண்ணாது ஆண்டவரைப் பின்பற்ற ஆயத்தமாக இருந்த ஓர் ஆவிக்குரிய மனிதனாக அவர் இருந்தார்.

லூக்கா 5:11ல் உள்ள முக்கிய நியதி என்ன? இயேசு நம்மிடம் எப்படிப்பட்ட அர்ப்பணிப்பை எதிர்பார்க்கிறார்? வலைநிறைய மீன்கள் இருந்த நிலையில், எல்லாவற்றையும் விட்டுவிட அந்த மீனவர்கள் ஆயத்தமாக இருந்தார்கள்; அதிலிருந்து என்ன தெரிகிறது?

இயேசுவின் வாழ்க்கையில் சம்பந்தப்பட்ட மிகமுக்கிய நிகழ்வுகளில், பேதுருவுக்கும் அவருக்கும் இடை நடந்த ஓர் உரையாடலும் ஒன்று. இயேசு யாரென்பதை நிரூபிக்க, தங்களுக்கு அவர் ஓர் அடையாளத்தைக் காட்டுமாறு சில பரிசேயர் களும் வேதபாரகர்களும் அவரிடம் சவால்விட்டார்கள். மத் 16:1-4. பிறகு, சீடர்களோடு தனித்திருந்த வேளையில், ஒரு சில அப்பங்களையும் மீன்களையும் வைத்து ஆயிரக்கணக்கானோரை தாம் போஷித்த இரண்டு அற்புதங்களைக் குறித்து இயேசு அவர்களிடம்கூறினார். 'பரிசேயர்சதுசேயர்என்பவர்களின்புளித்தமாவைக்குறித்து' அவர்களை எச்சரிக்கவே இயேசு அதையெல்லாம் கூறினார். மத் 16:11.

**மத் 16:13-17இல் நிகழ்ந்தது என்ன? பேதுருவுடைய வார்த்தைகளின் முக்கியத்துவம் என்ன?**

இயேசுமேல் தனக்கிருந்த விசுவாசத்தை பேதுரு இங்குத் துணிவாகக் கூறுகிறார். கிறிஸ்துவை மேசியாவென்று அவர் சொன்னதுபோலவே மற்றவர்களும் நினைத்தார்களென்பதை மத்தேயு 16:20 தெளிவாகக் காட்டுகிறது. பேதுரு உட்பட சீடர்கள் அனைவரும் இன்னும் அதிகம் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது; ஆனாலும், இயேசுவின் ஊழியத்தில் அது ஒரு திருப்புக்கட்டமாக அமையவிருந்தது.

"இப்பூமியில் ஒரு ராஜாவாக கிறிஸ்து அரசாளப்போகிறாரென சீடர்கள் இன்னும் எதிர்பார்த்தார்கள். தம்முடைய மெய்யான நோக்கங்களை வெகுகாலமாக இயேசு மறைத்து வைத்திருந்தாலும், இயேசு எப்போதுமே ஏழையாகவும் பிரபலமற்றவராகவும் இருக்கப்போவதில்லையென்றும், இயேசு தம் ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் நேரம் நெருங்கிவிட்டதாகவும் சீடர்கள் நினைத்தார்கள். ஆனால், ஆசாரியர்களும் ரபிமார்களும் இயேசுவுக்கு எதிராக, சொல்லமுடியாத அளவு பகைமையுடன் இருந்தார்கள். இயேசு தம் சொந்த தேசத்தாராலேயே மறுதலிக்கப்பட்டு, பொய்யன் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, ஒரு குற்றவாளியாக சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படவிருந்தார். இந்தப் பயங்கரங்கள் பற்றியெல்லாம் சீடர்கள் ஒருபோதும் நினைத்ததே இல்லை." - *EGW, DA, p 415.*

இயேசுதான் மேசியாவென சீடர்கள் உணர்ந்ததும், தாம் பாடுபட்டு மரிக்க வேண்டியிருந்ததை இயேசு போதிக்க ஆரம்பித்தார். மத் 16;21-23. ஆனால், பேதுருவால் அதை ஏற்கமுடியவில்லை. இயேசுவைக் 'கடிந்துகொள்ளும்' அளவிற்குச் செல்கிறார். உடனே இயேசு, "எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே" என்றார். மத் 16:23. இயேசு தம் ஊழியத்தில், இவ்வளவு கடுமையாக யாரையும் பேசியதில்லை; ஆனாலும், பேதுருவின் நலனை முன்னிட்டே அவ்வாறு கூறினார். பேதுருவின் வார்த்தைகளில் அவருடைய சுய நல ஆசைகளும், சுயநல நோக்கங்களும் வெளிப்பட்டன. அதற்கு முற்றுப்புள்ளி வைக்க இயேசு விரும்பினார். உண்மையில் அங்கு அவர் சாத்தானிடம் பேசியபோதிலும், பேதுருவும் செய்தியைப் புரிந்துகொண்டார். ஆண்டவரைச் சேவிக்கும்போது, உபத்திரவம் உண்டாகலாம் என்பதை பேதுரு அறியவேண்டியிருந்தது. அதை அவர் கற்றுக்கொண்டதை பின்னாட்களில் அவரது எழுத்துகள் காட்டுகின்றன. 1பேதுரு 4:13.

உங்களைக் குறித்த தேவதிட்டத்திற்கு, உங்கள் தனிப்பட்ட ஆசைகள் எதிராக இருந்திருக்கின்றனவா? அத்தகைய சூழ்நிலைகளில் செய்யவேண்டியதை எவ்வாறு தீர்மானித்தீர்கள்?

## ஜலத்தின்மேல் நடத்தல்

இயேசுவோடிருந்தபோது, பிரமிப்பூட்டும் பல நிகழ்வுகளை சீடர்கள் கண்டிருந்தார்கள்; ஆனாலும் அவற்றில் ஒருசிலதாம், மத் 14:13-33; மாற்கு 6:30-52; யோவான் 6:1-21 ஆகிய வசனங்களில் சொல்லப்படும் சம்பவங்களின் அளவுக்கு பிரமாண்டமானதாக இருக்கக்கூடும். ஐந்து சிறு அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரத்திற்கும் அதிகமானவர்களை இயேசு போஷித்தார். அத்தகைய ஒரு அற்புதத்தைப் பார்த்த பிறகு, சீடர்களின் சிந்தனைகள் எவ்வாறெல்லாம் ஓடியிருக்கக்கூடும்?

***ஆண்டவர்மேல் நாம் நம்பிக்கையோடு வாழ்வதற்கு, மத் 14:22-33ன் சம்பவத்திலிருந்து என்ன முக்கிய செய்தியை நாம் கற்றுக்கொள்ளலாம்?***

---

திரளானபேரைப் போஷித்ததில், இயேசுவின் வல்லமைகுறித்து ஒரு விசேஷித்த விதத்தில் அவர்கள் அறிந்துகொண்டார்கள். மெய்யாகவே, இயற்கை உலகைக் கட்டுப்படுத்த வல்லவராக அவர் இருந்தார். அதுதான் பேதுருவுக்கு ஆணித்தரமான நம்பிக்கை தந்திருக்கவேண்டும் அல்லது தைரியமாக, “ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும்” என்று கேட்டிருக்கமாட்டார். மத்தேயு 14:28. விசுவாசத்தின் எத்தகைய ஒரு வெளிப்பாடு அது!

இயேசுவும் அந்த விசுவாசத்தை அங்கீகரித்தார்; வரும்படி பேதுருவுக்குக் கட்டளையிட்டார்; பேதுருவும் இறங்கிச் சென்றார்; மீண்டும் பேதுரு தன் விசுவாசத்தை வெளிப்படுத்துகிறார். கடல் அமைதியாக இருக்கும்போது நடப்பது வேறு; ஆனால், புயலின் மத்தியில் பேதுரு நடந்துசெல்கிறார்.

இயேசுவை விட்டு நம் பார்வையை விலக்கக் கூடாதென அச்சம்பவம் போதிக்கிறதென பொதுவாக நாம் சொல்லுவோம். ஆனால், அதுமட்டுமல்ல. பேதுரு நிச்சயமாகவே இயேசுவை நம்பினார்; இல்லையேல், அப்படிக் கேட்டிருக்கமாட்டார்; இயேசு சொன்னபடி செய்திருக்கமாட்டார். ஆனாலும், செயலில் இறங்கிய பிறகு பயப்படத் துவங்குகிறார்; அந்தப் பயத்தால் மூழ்க ஆரம்பிக்கிறார்.

ஏன்? பேதுரு பயந்தாலும் இயேசு அவரை மிதக்க வைத்திருக்க முடியாதா? ஆனாலும், தான் ஒன்றுமே செய்யமுடியாமல், “ஆண்டவரே, என்னை ரட்சியும்” என்று உதவிவேண்டி கூப்பிடுகிற நிலைக்கு பேதுரு வருமட்டும் இயேசு விட்டுவிடுகிறார். மத் 14:30. பிறகு தம் கையை நீட்டி, பேதுருவைக் காப்பாற்றுகிறார். பேதுருவைத் தொடாமலேயே இயேசு அவரை மிதக்கவைத்திருக்க முடியும்; ஆனாலும், தம் கையை நீட்டி அவரைப் பிடித்தார். மத் 14:31. எனவே, தான் எவ்வளவுக்கு இயேசுவைச் சார்ந்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை பேதுரு உணர நிச்சயமாகவே அது உதவியிருக்கும்.

துவக்கத்தில், நம் ஆண்டவரின் வல்லமையில் நம்பிக்கைவைத்து, அதிக விசுவாசத்தோடு இருப்போம்; ஆனால், சூழ்நிலை மிக மோசமாகும்போது, பேதுருவிடம் இயேசு சொன்ன வார்த்தைகளை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும்: ‘அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்?’ மத் 14:31.

***பேதுருவின் தோல்விகளிலிருந்து நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்? லூக் 22: 31-34,54-62.***

பேதுருவின் நோக்கங்கள் நல்லவைகளாகவே இருந்தன. மற்ற சீடர்களைக் காட்டிலும் அதிக தைரியசாலியாகவும் இருந்தார். இயேசுவுக்கு என்ன நிகழப்போகிறதெனப் பார்ப்பதற்காகத்தான் உண்மையில் இயேசுவுக்குப் பின்னாலேயே அவர் சென்றார். ஆனால், தான் யாரெனத் தெரிந்துவிடக்கூடாதென நினைத்தார். இந்த சமரசமும், அதனால் நன்மை-தீமை பாதையிலிருந்து வழிவிலகியதுதான், இயேசு எச்சரித்திருந்ததுபோல தன் ஆண்டவரை மூன்றுமுறை மறுதலிக்கச் செய்தது.

சத்தியத்தில் சமரசம்செய்தால் எவ்வளவு கொடிய விளைவுகள் உண்டாகுமென்பதைக் காட்டும் வருத்தகரமான சம்பவமாக இது இருக்கிறது.

கிறிஸ்தவர்கள் முக்கியச் சத்தியங்களில் சமரசமானபோதெல்லாம் உண்டான பயங்கர விளைவுகளை கிறிஸ்தவ வரலாறு கண்டிருக்கிறது. வாழ்க்கையில் சமரசமாகவேண்டிய விஷயங்கள் உள்ளன; விட்டுக்கொடுக்கவேண்டிய சூழல்கள் உண்டாகலாம். ஆனால், முக்கியச் சத்தியங்களில் நாம் உறுதியாக நிற்கவேண்டும். எப்படிப்பட்ட சூழ்நிலையானாலும், என்னென்ன விஷயங்களில் நாம் ஒருபோதும் சமரசம் செய்யக்கூடாது என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். உதாரணமாக, வெளி 14:12.

கெத்செமனேயில் பேதுரு ஜெபிக்காமல் தூங்கினார்; எனவே, இனி ஏற்படவிருந்ததை எதிர்கொள்ள ஆவிக்குரியவிதத்தில் அவர் ஆயத்தமாக இல்லை; அப்போதே சமரசமாகுதலும் தோல்வியும் ஆரம்பித்துவிட்டதாக எலன் ஒய்ட் கூறுகிறார். ஜெபத்தில் அவர் உண்மையுள்ளவராக இருந்திருந்தால் 'தன் ஆண்டவரை அவர் மறுதலித்திருக்கமாட்டார்' என்று அவர் சொல்கிறார். *DA, p 714.*

ஆம், பேதுருவுக்குப் பயங்கரமான தோல்விதான் அது. ஆனால், அவருடைய தோல்வியைவிட தேவ கிருபை மிகவும் பெரியதாக இருந்தது. 'பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று.' ரோமர் 5:20. பேதுருவின் பாவத்தை இயேசு மன்னித்ததுதான் ஆதிகாலக் கிறிஸ்தவச் சபையின் பிரதான தலைவர்களில் ஒருவராக அவரை மாற்றியது. தேவ கிருபையின் நிஜத்தைப்பற்றிய பலத்த ஒரு படிப்பினை இது. நம் தோல்விகளுக்கு மத்தியிலும், விசுவாசத்தோடு நாம் முன்சொல்லவேண்டும் என்பதை நாம் எல்லாருமே இதிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டும்.

ஆம், பாவமன்னிப்பின் அருமையை நன்றாகவே அறிந்தவர் பேதுரு. நற்செய்தி என்னவென்பதை அனுபவத்தில் கண்டவர்; தன் பாவநிலையின் உண்மை நிலையை மாத்திரமல்ல, தேவ அன்பின் நீளத்தையும் அகலத்தையும் ஆழத்தையும், பாவிகள்மேல் அவர் காட்டும் கிருபையையும் கண்டிருந்தார்.

இயேசுவுக்கு பேதுரு ஏமாற்றமளித்ததுபோல, நமக்கும் அதிக ஏமாற்றத்தைக் கொடுத்தவர்களை மன்னிக்க நாம் என்ன செய்யலாம்?

## சபைத்தலைவராக பேதுரு

இயேசுவின் ஊழியக்காலத்தில், 12 சீடர்களுக்கும் தலைவனாக பலமுறை பேதுரு செயல்பட்டிருக்கிறார். சீடர்களின் செய்தித்தொடர்பாளரும் அவர்தான். மத்தேயுவும், 'முந்தினவன் பேதுரு' என்றே சீடர்களைப் பட்டியலிடுகிறார். மத் 10:2. ஆதி காலச் சபையில் முக்கிய பங்காற்றுகிறவராக இருந்தார். இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்துக்குப் பதிலாக வேறொரு சீடனை நியமிக்க முதலில் பரிந்துரைத்ததும் பேதுருதான். அப் 1:15-25. பெந்தெகொஸ்தே நாளில், தேவன் ஆவியானவரைப் பொழிந்தருளினார்; தேவன் தாம் வாக்குரைத்ததை நிறைவேற்றுவதாக மக்களுக்கு விளக்கிச்சொன்னவரும் பேதுருதான். அப் 2:14-36. இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசியதற்காகக் கைதுசெய்யப்பட்ட போது, பிரதான ஆசாரியனிடமும் கூடியிருந்த யூதத்தலைவர்களிடமும் பேசியதும் அவர்தான். அப் 4:1-12. இயேசுவின் சீடராக மாறிய முதல் புறஜாதியானாகிய கொர்நேலியுவிடம் வழிநடத்தப்பட்டதும் அவரே. அப் 10:1-48. பவுல் மனமாறி, முதன்முதலாக எருசலேமுக்கு வந்தபோது, பேதுருவோடுதான் பதினைந்து நாட்கள் தங்கியிருந்தார். கலா 1:18. அப்போது எருசலேம் முழுவதிலுமிருந்த இயேசுவின் சீடர்களைப்பற்றி பவுல் கூறும்போது, பேதுருவையும் யோவானையும் இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபையும் சபையின் 'தூண்கள்' என்று குறிப்பிடுகிறார். கலா 2:9.

**கலா 1:18,19: 2:9,11-14 ஆகிய வசனங்களை வாசியுங்கள். ஆதிகால சபையில் ஒரு முக்கியத் தலைவராகப் செயலாற்றியபோதும்கூட பேதுரு எப்படிப்பட்டவராக இருந்தார்?**

பேதுரு ஒரு சபைத்தலைவர்; ஆண்டவரின் அழைப்பைப் பெற்றவர் (பேதுருவிடம் இயேசு, 'என் ஆடுகளை மேய்ப்பாயாக' என்றார். யோவான் 21:17);'எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும்' சொல்லாதபடி தரிசனம் கண்டவர். (அப் 10:28); ஆனாலும், அவர் வளரவேண்டியிருந்தது.

சபையின் ஆரம்ப நாட்களில், கிறிஸ்தவர்கள் அனைவருமே கிட்டத்தட்ட யூதர்களாகத்தாம் இருந்தார்கள்; அவர்களில் பலர் 'நியாயப்பிரமாணத்துக்காக வைராக்கியமுள்ளவர்களாய்' இருந்தார்கள். அப் 21:20. புறஜாதியார் தீட்டுள்ளவர்களாகக் கருதப்பட்டதால், அவர்களோடு சாப்பிடுவது தவறென்று நியாயப்பிரமாணத்திலிருந்து காரணங்கூறினார்கள். எருசலேமிலிருந்த யாக்கோபிடமிருந்து யூதர்கள் சிலர் வந்தபோது, அந்தியோகியாவில் புறஜாதியாரோடு சேர்ந்து சாப்பிடுவதை பேதுரு தவிர்த்தார்.

அது நற்செய்திக்கே உண்டான இழுக்காக பவுல் கருதினார். பேதுரு மாய்மாலத்துடன் நடந்துகொண்டாரென்று, அதற்காக அவரைக் கண்டிக்கவும் பவுல் பயப்படவில்லை. விசுவாசத்தினால்மாத்திரமே நீதிமானாக்கப்படுகிறோம் என்கிற கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கியப் போதனையைப் போதிக்க அந்தத் தருணத்தை அவர் பயன்படுத்திக்கொண்டார்.

தேவனால் அழைக்கப்பட்டிருந்தபோதிலும், பேதுருவால் புரிந்துகொள்ளமுடியாத சில தவறுகள் அவரிடமும் காணப்பட்டன. அதுபோன்று நாம் புரிந்திராத நம் தவறுகளை யாராவது சுட்டிக்காட்டினால், நாம் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும்?

## மேலும் படிக்க:

வெள்ளி
மார்ச் 31

ஆரம்பத்தில் பேதுரு தன் பாவநிலையை உணர்ந்திருந்தார்; பிறகு, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று அறிவித்தார். அதன்பின் தன்னுடைய ஆண்டவரை மோசமாக மறுதலித்தார். சபையின் தலைவராக பல வெற்றி தோல்விகளைச் சந்தித்த அந்த மீனவர் நிச்சயமாகவே ஒரு முக்கியக் கதாபாத்திரம்தான். அதனால்தான், ஆவியானவரின் பிழையற்ற ஏவுதலால் அந்த நிருபங்களை அவர் எழுத முடிந்தது; அதற்கு அவருடைய கருத்தியல் அறிவு மட்டுமல்ல, அனுபவ அறிவும் உதவியது. கிறிஸ்துவின் இரட்சிக்கும் கிருபையை மட்டுமல்ல, மாற்றுகிற அவரது கிருபையையும் அறிந்தவர்: 'பேதுரு ஒரு பயங்கரச் சறுக்கலுக்கு ஆளாவதற்குமுன், எப்போதும் முந்திக்கொள்பவராகவும் ஆணவப்போக்குள்ளவராகவும் இருந்தார்; அவ்வப்போது என்ன தோன்றுகிறதோ அதை யோசிக்காமல் பேசுவார். தான் எப்படிப்பட்டவன், என்ன பேசவேண்டும் என்று தன்னைப்பற்றி தெளிவாக அறிந்திராத நிலையில், பிறரைத் திருத்துவதற்கும், தன் எண்ணத்தை வெளிப்படுத்துவதற்கும் அவர் தயங்கியதே இல்லை. ஆனால் பேதுரு மனமாறினார்; அவசரமும், சிடுசிடுப்புமான பேதுருவிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவராக மனமாறிய பேதுரு இருந்தார். தன் முந்தைய வைராக்கியம் அப்படியே இருந்தாலும், கிறிஸ்துவின் கிருபை அதைக் கட்டுப்படுத்தியது. சிடுசிடுப்பும் சுயநம்பிக்கையும் சுயமேன்மையும் அடைவதற்குப் பதிலாக, அமைதியைக் கற்றுக்கொள்ளும் மனநிலையும் தன்னடக்கமும் உள்ளவராகக் காணப்பட்டார். அப்போதுதான், கிறிஸ்துவினுடைய மந்தையின் ஆடுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் அவர் போஷிக்கமுடிந்தது.' – *EGW, 5T, p 334,335.*

பேதுருவின் தன்மை கொஞ்சமாவது நம்மிடம் காணப்படுகிறதா? நாமும் நம் விசுவாசத்திற்காக வைராக்கியத்துடன் நின்றிருப்போமல்லவா? சில சமயங்களில் நாமும் கூடமோசமாகத் தோற்றிருப்போம் அல்லவா?

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *இவ்வளவு கேவலமாக இயேசுவை மறுதலித்தபிறகும்கூட, ஆதிகாலச் சபையில் மாத்திரமல்ல, கிறிஸ்தவ விசுவாசத்திலும் ஒரு முக்கியப் பங்காற்றும் நிலைக்கு பேதுரு வளரமுடிந்தது. இதிலிருந்து என்ன தெரிகிறது? புதிய ஏற்பாட்டின் ஒரு பகுதியை அவர் எழுதியிருக்கிறார். ஆண்டவருக்கு ஏமாற்றமளிக்கும் விதத்தில் நடந்துகொண்டவர்களை அணுக, அவருடைய மனமாற்ற அனுபவத்திலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம்?*

2. *சமரசமாவதின் ஆபத்துகள் சபையை எவ்வாறெல்லாம் பாதிக்கக்கூடும்? எதை விடலாம், எதைப் பெறலாம், எந்தச் சூழ்நிலையிலும் எதில் சமரசமாகக் கூடாது என்பதை எவ்வாறு அறிந்துகொள்ளலாம்? சமரசமானதால் பேரழிவு உண்டான என்ன உதாரணங்கள் சபைவரலாற்றில் உள்ளன?*

3. *சில பாடங்களைக் கடினமானவிதத்தில் பேதுரு கற்றுக்கொண்டார். பேதுருவைவிட எளிதான விதங்களில் அந்தப் பாடங்களைக் கற்றுக்கொள்ள அவருடைய தவறுகளிலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.

அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.